ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2255/55 – 2021 නොවැම්බර් 26 වැනි සිකුරාදා – 2021.11.26
2255/55 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை அதிபர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

நான்காவது திருத்தம்

பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட 2014, ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதிய மற்றும் 1885/31 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அதிபர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வரும் பகுதி II இல் காட்டப்பட்டுள்ளவாறு மீளவும் திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

**எம்.ஏ.பீ. தயா செனரத்**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

*2021, நவெம்பர் 22.*

**பகுதி I**

| | | |
|---|---|---|
| திருத்த இலக்கம் 01 | – | 2017 பெப்புருவரி மாதம் 02 ஆம் திகதிய மற்றும் 2004/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை |
| திருத்த இலக்கம் 02 | – | 2018 யூன் மாதம் 19 ஆம் திகதிய மற்றும் 2076/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை |
| திருத்த இலக்கம் 03 | – | 2020 திசெம்பர் மாதம் 30 ஆம் திகதிய மற்றும் 2208/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை |

**பகுதி II**

7.2.2.1 (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது தேசியக் கல்வி நிறுவகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட கல்விமாணிப் பட்டம்

அல்லது

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஏதேனுமொரு துறையில் பெற்றுக்கொண்ட பட்டமொன்றுடன் பின்வருவனவற்றுள் ஏதேனுமொரு தகைமையைக் கொண்டிருத்தல்.

(அ) பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா அல்லது பாடப் பரப்பில் (Subject Combination) "கல்வித்துறை" தொடர்பாகக் குறைந்தபட்சம் 50% உள்ளடங்கும் துறைசார் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா

(ஆ) ஆசிரியர் பயிற்சி சான்றிதழ்

(இ) தேசிய கற்பித்தல் டிப்ளோமா

அல்லது

(iii) தேசிய கற்பித்தல் டிப்ளோமாவை/ஆசிரியர் பயிற்சி சான்றிதழைப் பெற்றிருத்தல்

7.2.2.2 மேற்படி 7.2.2.1 இன் (i) அல்லது (ii) இன் தகைமை பெற்ற இலங்கை ஆசிரியர் சேவையில் ஐந்து (05) வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலமொன்று அல்லது 7.2.2.1 இன் (iii) இன் தகைமை பெற்ற இலங்கை ஆசிரியர் சேவையில் ஆறு (06) வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் மற்றும் அக்காலப் பகுதியினுள் அனைத்து சம்பள ஏற்றங்களையும் உழைத்திருத்தல்

12.1 நிரந்தரமாக்குவதற்கான நிபந்தனைகள்

12.1.1 இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர் ஒருவர் ஒரு வருட பதிற் கடமை காலத்திற்கு உட்படுவார்

12.1.2 சேவை ஆரம்பப் பயிற்சியைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் பதிற் கடமை காலத்தினுள் தமது வேலை, வரவு மற்றும் நடத்தை என்பவற்றை திருப்திகரமான முறையில் பேணியுள்ள உத்தியோகத்தர்கள் இலங்கை அதிபர் சேவையில் நிரந்தரமாக்கப்படுவர்

12.2 விடுவிப்பதற்கான நிபந்தனைகள்

இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்கள் தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாணப் பாடசாலைகளின் அனுமதிக்கப்பட்ட பதவிகளில் பணியாற்றுவதற்கு உட்படுகின்றனர். இங்கு மாகாண அரசாங்க சேவையின் பதவியொன்றில் பணியாற்றுவதற்காகத் தற்காலிகமாக விடுவிக்கப்படுவார். அவ்வாறு பணியாற்ற வேண்டிய காலமானது சேவையின் தேவை, பதவியணியை ஈடுபடுத்த வேண்டிய தேவை மற்றும் ஏனைய ஏற்புடைய விடயங்களுக்கு அமைய மாகாண அதிகாரி மற்றும் நியமிப்பு செய்யும் அதிகாரி ஆகியோரது இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

(i) சேவையிலிருந்து விடுவிக்கும் நிபந்தனைகளுக்கு ஏற்ப மாகாண அரசாங்க சேவைக்கு விடுவிக்கும் கடிதமொன்று நியமிப்பு செய்யும் அதிகாரியினால் குறித்த உத்தியோகத்தருக்கு வழங்கப்படும்.

(ii) உரிய மாகாண அதிகாரிகளினால் மாகாணத்திற்குள் நியமித்தல் மற்றும் இடமாற்றம் செய்தல் என்பன மேற்கொள்ளப்படும்.

(iii) மாகாண அரசாங்க சேவைக்காக விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் மாகாண அதிகாரிகளினதும் நியமிப்பு செய்யும் அதிகாரியினதும் இணக்கப்பாட்டிற்கமைய அம் மாகாண சபைக்கு வெளியே இடமாற்றம் செய்யப்படுவார்.

12-218

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.